**சரியான விடை II Revision Commece Key2014-15**

1.(b) இந்து கூட்டு குடும்பம்
2.(c) துறைமுறை அமைப்பு
3.(c) வரையறா பொறுப்பு
4.(a) ஒப்பந்தத்தால்
5.(a) பூரண நல்ல நம்பிக்கை
6.(c) பெயரளவு கூட்டாளி
7.(c) நிறுமச் செயல்முறை விதிகள் மாதிரி
8.(b) கரடி
9.(b) சட்டமுறை நிறுமம்
10.(d) பங்காதயம் பெறுவதிலும் பங்குமுதலைத்திரும்ப பெறுவதிலும்
11.(c) அழைப்புபணத்தை செலுத்ததவறுவது
12.(c) செயல்முறை விதிகளில் பெயரிடுவதனால்
13.(a) பொது வெளியீடு
14.(c) 6
15.(b) 1956
16.(d) வரையறையில்லை
17.(c) சரக்கு
18.(c) அரசு நிறுமம்
19.(a) 90 நாட்கள்
20.(d) வரையறுக்கப்படாத செயல் சுதந்திரம்

**கோடிட்ட இடத்தை நிரப்புக**

21. பன்னாட்டு வணிகம்
22 .வரையறா பொறுப்பு
23. சிறிய
24. உறங்கும்/உழையா/முதலிடும்
25. நிறுவனம்
26. கூட்டாண்மை கலைப்பு
27. வெளிப்படை ஆணையுரிமை
28. 7
29. செயல்முறை விதிகள்
30. ஐந்தாயிரம்
31. செயல்முறை விதிகளில்
32. 21
33 .பகராள்
34. 5
35. தகவல் அறிக்கை
36. பட்டியலிடுதல்
37. மும்பை
38. கூட்டுறவு சங்கங்கள்
39. நாட்டுடைமையாக்கல்
40. இயக்குநரவை

**ஏதேனும் 10 வினாக்களுக்கு விடையளி**

**41.அமைப்பு10X4=40**

ஆலன்லூயி அவர்களின் கூற்றுபடி செய்ய வேண்டிய பணியினை அறிந்து அதனை தொகுதிகளாக பிரித்தலும் குறிக்கோள்களை அடைய பணியாளர்களால் பயன்தரு முறையே உழைக்கும் நோக்குடன் அவர்களுக்கிடையே உறவு முறைகளை ஏற்படுத்தும் பொறுப்பையும் ஆணையுரிமையையும் வரையுறுத்தி வழங்களையும் அமைப்பு என்ற சொல் குறிக்கும்

**42.கர்த்தா** இந்துக் கூட்டுக் குடும்பத் தலைமை உறுப்பினர் ஆவார்

**43.வரையறா பொறுப்பு:**தொழிலின் கடன்களை செலுத்த தொழிலின் சொத்துக்கள் போதுமானதாக இல்லாவிடில் தனது சொந்த சொத்துக்களை இழக்க நேரிடும். அதாவது கடனீந்தோருக்கு உரிமையாளரின் சொந்த சொத்துக்களை பறிமுதல் செய்யும் உரிமை உண்டு

**44.கூட்டாண்மை** சட்டம் 1932 பிரிவு 4ன்படி எல்லோரும் சேர்ந்தோஅல்லது எல்லோருக்குமாக ஒருவரோ நடத்தும் தொழிலின் லாபத்தை பகிர்ந்து கொள்ள ஒப்புக்கொண்டவர்களிடையே நிலவவும் உறவு முறையே ஆகும்

**45.கூட்டாண்மை கலைப்பு நிறுவனகலைப்பு வேறுபாடு :**

| கூட்டாண்மை கலைப்பு | நிறுவனகலைப்பு |
|---|---|
| 1.ஒருவர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டாளிகள் தங்களுக்குள்ள உறவை முடித்து கொள்ளுதல் | அனைத்து கூட்டாளிகளும் தங்களுக்குள்ள உறவை முடித்து கொள்ளுதல் |
| 2.தொழில் முடிவுக்கு வரலாம் அல்லது தொடர்ந்து நடத்தலாம் | தொழில் முடிவுக்கு வந்துவிடும் |
| 3.கலைப்பிற்கும் பிறகு தொழில் தொடர்ந்து நடைபெறும் | தொழில் தொடர்ந்து நடைபெற இயலாது. |
| 4.இதில் நிறுவனக்கலைப்பு ஏற்படுவதில்லை | இதில் கட்டாயமாக கூட்டாண்மை கலைப்பு ஏற்படும் |

**46.குவிவு முன்னுரிமைப்பங்கு :** போதிய ஆதாயம் ஈட்டாவிடில் பங்காதாயம் வழங்கப்படாது. எனினும் அந்தாண்டில் பங்காதாயம் பெறும் உரிமை இவ்வகைப்பங்குநர்கட்குக் காலாவதி ஆவதில்லை. அவர்கட்குச் செலுத்தப்பெறாத பங்காதாயம் சேர்ந்து நிலுவையில் இருந்துகொண்டேயிருக்கும். லாபம் ஈட்டும் பின்வரும் ஆண்டுகளில் பிற பங்குநர்கட்குப் பங்காதாயம் வழங்குமுன்னர் குவிப் பங்குநர்கட்கு நிலுவையில் உள்ள முந்தைய ஆண்டுகளின் பங்காதாயத்தை வழங்க வேண்டும். வழங்கப்படாப் பங்காதாயத்தை நிலுவையாகப் பெறும் உரிமை படைத்த பங்குதான் குவி முன்னுரிமைப் பங்கு ஏன்று கூறப்படுகிறது. வேறு எதிர்மறையாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லையெனில் முன்னுரிமைப் பங்குகள் அனைத்தும் குவி முன்னுரிமைப் பங்குகளே அகும்.

**47.பங்குகளை தள்ளுபடியில் வெளியீடுதல் :** பங்குகளை அவற்றின் முக மதிப்பிற்கும் குறைத்து வெளியிடப்படுதல் பங்குகளை வட்டத்திற்கு வெளியிடுதல் என்று கூறப்படுகிறது. எடுத்துக்காட்டாக பங்கொன்றின் முகமதிப்பு ரூ.10 எனவும்அது ரூ.8க்கு வெளியிடப்படுவதாகவும் கொண்டால் பங்கு வெளியீட்டுத்தள்ளுபடி ரூ.2 ஆகும். அதாவது வெளியீட்டு விலையினின்று முகமதிப்பைக் கழித்தால் கிடைக்கும் தொகையே பங்கொன்றின் வட்டம் அல்லது தள்ளுபடி என்பதை ஊணரலாம்.

**48.சட்டமுறை கூட்டம் :** 1.பொது வரையறு நிறுமத்தில் பங்குநர்களின் முதல் கூட்டமாகும். இது சட்டப்படி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. 2.உரிமம் பெற்று ஆறு மாதத்திற்குள் ஒரு மாதத்திற்கு பின்னர் இக்கூட்டத்தை கூட்ட வேண்டும்.

**49.மாற்று இயக்குநர் :** இயக்குநர் ஒருவர் தொடர்ந்து மூன்று மாதங்கள் வெளியூர் சென்றிருந்தால் அவருக்கு பதிலாக இயக்குநரவை

மாற்று இயக்குநர் ஒருவரை நியமிக்கும் அந்த நபரே மாற்று இயக்குநர் ஆவார்.

**50.போல்ட் :** 1.போல்ட் என்பது மும்பை பங்குச் சந்தையில் மாாச் 1995 முதல் நடைமுறையில் உள்ள வணிகச் செயலாகும். 2.இது ஆணை மற்றும் விலை நிலவரத்தின் அடிப்படையில் செயல்படுவதாகும்.

**51.பரஸ்பர நிதிகள் :**1.கூட்டுறவின் சங்கத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் தனக்குதானே உதவி செய்து கொள்ள வேண்டும். 2.இது சுய உதவி அல்லது தனக்குத்தானே உதவி எனப்படும்.

3. மேலும் பிறருக்கும் உதவி செய்து வேண்டும் இது பரஸ்பர உதவி எனப்படும்.

**52.ஒருநபர் ஒருவாக்கு :** 1.கூட்டறவின் மேலாண்மை மக்களாட்சி அடிப்படையில் அமைந்துள்ளது. 2.எவ்வளவு பங்குதொகை செலுத்தியிருந்தாலும் ஒரு நபர் ஒரு வாக்கு அளிக்கப்படுகிறது.

**53.கூட்டுறவு சிறப்பங்காடி 4 (எ-டு) :**

1.காமதேனு சிறப்பங்காடி – சென்னை
2.சிந்தாமணி சிறப்பங்காடி – திருச்சி
3.கற்பகம் சிறப்பங்காடி – வேலூர்
4.பொன்னி சிறப்பங்காடி - சேலம்

**54.அரசு நிறுமம் :** ஒரு நிறுமத்தின் செலுத்தப் பெற்ற பங்கு முதலில் 51 விழுக்காடுக்கு குறையாமல் மத்திய (அ)மாநில அரசு வைத்திருக்குமேயானல் அதனை அரசு நிறுமம் எனலாம்.

**55.அரசு எவ்வழிகளில் தொழில் துவங்கலாம் :**

1)அரசே முதலீடு செய்து புதிய தொழில் நிறுவனங்களை அமைத்து அவற்றை மேலாண்மையை மேற்கொள்ளலாம்.2) ஏற்கனவே தனியார் துறையில் இயங்கிவரும் தொழில் அமைப்புகளை அரசே ஏற்று நாட்டுடைமையாக்கி அவை அரசு தொழில்களாக செயல்படும்.

**பகுதி - இ** **5x8=40**

**56.இந்து கூட்டுக்குடும்பம் :** இந்தியாவில் இந்து கூட்டுக் குடும்ப வணிக அமைப்பு தலை சிறந்து விளங்குகிறது. இது இந்தியாவில் மட்டுமே உள்ளது. வியாபாரம்: கைத்தொழில்கள் சிறுதொழிற் சாலைகள் போன்றவை.இந்து கூட்டுக் குடும்ப வியாபார அமைப்பின் குடும்ப தலைமை உறுப்பினருக்கு கர்த்தா என்று பெயர் 2.குடும்ப தலைவர் மூலம் வியாபாரத்தை நடத்துவர் <u>2.மிட்டக் சார சட்டத்தின் படி :</u>

1.ஒரு குடும்பத்திலுள்ள ஆண்வாரிசுகள் மட்டுமே வம்சாவழி சொத்தில் உரிமையுள்ளவாகள் .

2.இச்சட்டம் அஸ்ஸாம் மற்றும் மேற்கு வங்காளம் தவிர இந்தியாவில் பிறபகுதிகளில் பயன்படுத்தப்படுகிறது.<u>3.தாயாபாகா சட்டத்தின் படி</u>

1.சொத்தின் உரிமை மாற்றம் கூட்டு வாரிசுதாரரான் வாரிசுகளுக்கு வாரிசு உரிமையின்படி ஏற்படுவதாகும். இது பிறப்பின் காரணமாக அல்ல.2.கூட்டு வாரிசுதாரர் அவரது சொத்தின் பங்கை மற்ற கூட்டு வாரிசுதாரரின் சம்மதமின்றி மாற்றித்தர இயலும்.

**57.கூட்டாண்மையில் இளவர் கூட்டாளி** இளவர் என்பவர் 18 வயது பூர்த்தி அடையாதவர். பாதுகாவலர் நியமிக்கப்பட்டால் 21 வயது வரை இளவராக கருதப்படுகிறார். சட்டப்படி இளவர் ஒப்பந்தத்தில் ஈடுபட தகுதியில்லாதவர். எனவே அவர் கூட்டாளியாக முடியாது. ஆனால் கூட்டாண்மையின் பயனுக்காக அனைத்துக் கூட்டாளிகளும் ஒப்புக்கொண்டால் இளவர் கூட்டாளியாக முடியும். <u>உரிமை வயதை அடையும் முன் :</u>

1) தொழிலின் சொத்திலும் இலாபத்திலும் பங்கு பெறும் உரிமை 2) நிறுவனக் கணக்குகளை பாா்வையிட்டு அவற்றை நகல் எடுக்கும் உரிமை

3) தொழிலின் சொத்துகள் இலாபத்தில் அவருக்கு உள்ள பங்கு அளவிற்கு மட்டும் அவருக்குப் பொறுப்புஆகும்.அவரின்சொத்துகள்பொறுப்பாகாது.

<u>உரிமை வயதை அடைந்த பின் :</u>

1) உரிமை வயது அடைந்தபின்பு தொடாந்து கூட்டாளியாக இருக்க வேண்டுமா அல்லது விலக வேண்டுமா என்பதை ஆறு மாதத்திற்குள் தீர்மானித்து முடிவை அறிவிக்க வேண்டும்.

2) அவ்வாறு ஆறு மாதத்திற்குள் அறிவிக்காவிட்டால் இளவராகச் சோத்துக் கொள்ளப்பட்ட நாள் முதல் நிறுவனக் கடன்களுக்குப் பொறுப்பாவார்.

3) ஆறு மாதத்திற்குள் விலகுவதாக அறிவித்தால் அறிவித்த நாளிலிருந்து நிறுவனக்கடன்களுக்கு பொறுப்பாகமாட்டார்.

**58.அமைப்பு முறையேட்டின் உள்ளடக்கம் யாது ?**

**அ)பெயர்குறித்த உட்பிரிவு** : நிறுமத்தின் பெயர் இதில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

**ஆ)நோக்கம் குறித்த உட்பிரிவு** : நிறுமம் ஈடுபடக்கூடிய நடவடிக்கைகள் அதில் குறிப்பிடப்பட்டிருப்பதால் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த உட்பிரிவாய் கருதப்படுகிறது.இதில் குறிப்பிடாத எச் செயலிலும் நிறுமம் ஈடுபடக்கூடாது.

**இ)இடங்குறித்த உட்பிரிவு** : பதிவு அலுவலகம் அமைந்துள்ள மாநிலத்தின் பெயர் இங்கு கொடுக்கப்பட்டிருக்கும்.

**ஈ)பொறுப்பு குறித்தஉட்பிரிவு :** இப்பிரிவில் தான் உறுப்பினர்களின்பொறுப்புவரையறுக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. பொறுப்புறுதி நிறுமமாயின் அது கலைப்பக்குள்ளாக நேரிடும்.பொது நிறுமச் சொத்தகள் அதன் கடன்களை அடைக்க போதுமானதாக அல்லாத நிலையில் ஒவ்வொரு உறுப்பினரும் கொண்டுவருவதாக உறுதி உடுத்துக்கொண்ட தொகை குறிப்பிடப்படும்.

**உ)முதல் குறித்த உட்பிரிவு** : எப்பங்கு முதலுடன் நிறுமம் பதிவு செய்யப்படுகிறது. என்ற விவரமும் முதல் தொகை குறிப்பிடப்பட்ட மதிப்புடைய பங்குகளாக பிரிக்கப்பட்டுள்ள விவரமும் கொடுக்கப்படுகின்றன.

**59.முறைக்கேடான ஒதுக்கீடு :** 1.பங்கொன்றின் இயல்மதிப்பு குறைந்தது 5 சதவீதம் செய்தல்

2.தகவலறிக்கை வெளியிட்ட 90 நாட்களுக்குள் குறைந்தளவு பங்கெடுப்பு பெறாத போதும் பங்குகளை ஒதுக்கீடு செய்தல்

3.பங்கு விண்ணப்பப்பணத்தை அட்டவணை வங்கியில் போட்டு வைத்திருக்காமல் ஒதுக்கீடு செய்தல்

4.தனி ஏற்பாட்டின் மூலம் பங்குமுதல் திரட்டிட ஏற்பாடு செய்துவிட்ட நிலையில் தகவலறிக்கை வெளியிடாத போது தகவலறிக்கைக்கு மாற்றறிக்கை ஒன்றை பங்கு ஒதுக்கீட்டிற்கு குறைந்தது 3 நாட்களுக்கு முன்னர் பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும்.அவ்வாறு தாக்கல் செய்யா விடில் அது முறைக்கேடான ஒதுக்கீடாக கருதப்படும்.

**60.தனிவரையறு நிறுமத்தின் சலுகைகள் 8 :**

1. தனி வரையறு நிறுமம் ஒன்றே இரு நபர்களுடன் உருவாக்கம் செய்துகொள்ள முடியும். ஒரேவித கருத்துடைய பலரைத் தேட வேண்டுவதில்லை. இதனால் இதனை அமைப்பதும் எளிதாகிறது. அது செயல்படுவதிலும் கருத்து வேற்றுமை தலை தூக்காது. சிறந்த நிர்வாகம் நடைபெற ஏதுவாகிறது. 2.கூட்டுருவாக்கச் சான்றிதழ் பெற்றவுடன் தனி வரையறு நிறுமமானது தொழில் தொடங்க முடியும். பொது வரையறு நிறுமத்திற்குத் தேவையான தொழில் தொடக்கச் சான்றிதழ் பெறத்தேவையில்லை. அதற்காகத் தயாரிக்க வேண்டிய பத்திரங்கள் முதல் திரட்டும் செலவுகள் அனைத்தும் மிச்சம். 3. பங்கு முதலைத் திரட்ட பொதுமக்களிடம் பங்குகளை வாங்கிட அழைக்கும் தகவல் அறிக்கையை வெளியிட தனி வரையறு நிறுமத்திற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் முன்கூறியபடி பங்கு முதல் திரட்டும் செலவு மிகவும் குறைவாகிறது.

4. குறைந்தளவு பங்கெடுப்பு பெற்ற பிறகுதான் பங்குகளை ஒதுக்கவேண்டும் என்ற விதியிலிருந்து தனி வரையறு நிறுமத்திற்கு விலக்கு தரப்பட்டுள்ளது.

5. பொது வரையறு நிறுமம் கட்டாயம் கூட்டவேண்டிய சட்ட முறைக் கூட்டத்தைத் தனிவரையறு நிறுமம் கூட்ட வேண்டுவதில்லை. 6. மீண்டும் முதல் திரட்ட பங்கு வெளியிடும்பொழுது தற்பொழுதுள்ள பங்குநர்கட்கு குறிப்பிட்ட அளவு பங்குகள் ஒதுக்கப்பட்ட பின்னரே புதிய பங்குநர்கட்குப் பங்குகள் ஒதுக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையும் தனி வரையறு நிறுமத்திற்குப் பொருந்தாது. 7. தனி வரையறு நிறுமம் இரு இயக்குநர்களுடனேயே செயல்படமுடியும். 8.தனி வரையறு நிறுமத்தின் இயக்குநர்கள் அந்நிறுமத்தில் தாங்கள்இயக்குநர்களாகச் செயல்பட விரும்புவதற்கான எழுத்து மூலமான இசைவை நிறுமப் பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டியதில்லை.9. இயக்குநர்கள் குறிப்பிட்டளவுத் தகுதிப் பங்குகளை வைத்திருப்பதாக அல்லது குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பெற்று விடுவதாக உறுதிமொழியைத் தனி நிறுமமாயின் தர வேண்டியதில்லை.

**61.முதலீட்டார் ஊகவணிகர் வேறுபாடு :**

| முதலீட்டாளர்கள் | ஊகவணிகர்கள் |
|---|---|
| 1.முதலீடுகளின் பாதுகாப்பையே பெரிதும் விரும்புவார்கள் | முதலீகளின் மதிப்பை அதிகரிப்பதிலும் லாபம் பெறுவதிலும் குறியாக இருப்பர் |
| 2.முதலீடுகளின் மூலம் வருவாய் ஈட்டுவதையே விரும்புவர் | பத்திரங்களை வாங்கி விற்பதின் மூலம் கிடைக்கும் லாபத்தையே விரும்புவர் |
| 3.இடர்பாடு குறைவு | இடர்பாடு அதிகம் |
| 4.நிலையான வருவாய் | நிலையான ஆதாயம் |
| 5.நீண்ட காலம் ஈடுபாடும் பொறுப்புடையது | குறுகிய காலம் ஈடுபாடும் பொறுப்புடையது |

**62.கூட்டுறவு சிறப்பங்காடியின் பொருள்தந்துஅதன் சிறப்பியல்புகளை தருக ?**

இதுபேரளவுசில்லறைவியாபாரஅமைப்புகூட்டுறவுஅமைப்பில்தொடங்கப்படுவதுஇதில்விற்கப்படும்பொருட்கள்விலைகளுடன்இணைக்கப்பட்டிருக்கும்.ஒரேவிலைபேரம்பேசஇயலாது.வரைவிலக்கணம் :

சில்லறைவிற்பனைசெய்யும்துறைவாரிஅமைப்புநான்கு அடிப்படைதுறைகளைக்கொண்டது.மளிகைப்பொருள்சுயசேவைப்பிரிவுமாமிசப்பால்பொருள்கள்மற்றும்வீட்டுஉபயோகப்பொருள்கள்விற்பனைசெய்யும்இடம்சலுகைஅடிப்படையில்துறைகளைகுத்தகைக்குநடத்தும்இடம்என்றுM.M .ஜிம்மாமென்வரையறுக்கிறார்.

சிறப்பியல்புகள்

1. பேரளவுசில்லறைவிற்பனைநிலையம்.
2. பலவகையானபொருட்கள்கிடைக்குமிடம்
3. சுயசேவைவிற்பாண்மைதேவையில்லை
4. பலதுறைகளைகொண்டது.
5. ரொக்கஅடிப்படையில்விற்பனைசெய்யப்படும்
6. பொருட்களில்கலப்படம்தவிர்க்கப்படும்

சரியானஅளவுஎடைகுறைஎன்றநிலைஏற்படுவதுஇல்லை.

8.அரிதானபொருட்கள்கூட இங்குவிற்பனைசெய்யப்படும்.

**63.அரசுநிறுமத்தின் இயல்புகள் : 1.கூட்டுருவாக்கம்:** அரசு நிறுமம் இந்திய நிறுமச்சட்டத்தின் கீழ் கூட்டுருவாக்கப்பட்டு தோற்றுவிக்கப்படுகிறது.

**2.அரசுநிதி** :இதற்கு தேவையான பெரும்பான்மை பங்குமுதல் அதாவது 51அரசு பெற்றுள்ளது.

**3.பொதுமக்கள் பங்கேற்பு:** தனியர் துறையும் பொதுமக்களும் பங்கு முதல் பெற்று இதில் பங்கேற்கிறார்கள். **4.மேலாண்மை:** இதன் மேலாண்மை இயக்குநரவையிடம் உள்ளது.தகுதி திறமை அனுபவம் வாய்ந்தவர்களையே இயக்குநாகளாக அரசு நியமிக்கும். இதில் பல பிரிவினர்களும் இடம் பெறும் வண்ணம் அரசு நியமிக்கின்றது. **5.தன்னாட்சியுரிமை** : அரசு நிறுமங்கள் நிர்வாகம் மற்றும் நிதி குறித்து சுதந்திரமாக முடிவெடுத்து செயல்படும் **6.பணியாளர்கள்:** அதன் பணியாளாகள் அரசு

அலுவலர் அல்ல. இயக்குநாகள் மற்ற பணியாளர்களை அரசு தோர்ந்தெடுத்து அமர்த்தும்.**7.கட்டுப்பாடு** :அந்தந்த துறை சார்ந்த அமைச்சான் கட்டுப்பாட்டிற்கும் கண்காணிப்பிற்கும் உட்பட்டு செயல்படுகிறது.

8.தணிக்கையர் :**இதன் தணிக்கையாளரை அரசே** நியமிக்கும்.

**பகுதி - ஈ 4x20=80**

தொழில் அமைபப்பன வடிவஙகள்

1. **தனிவணிகநிறுவனஙகள்**

தனிநபரால்உருவாக்கப்பட்டுமேலாண்மைசெய்யும்வணிகஅமைப்புதாமேமுதலீட்டுமேலாண்மைசெய்துகட்டுப்படுத்தப்படும்வியாபாரஅமைப்புதனிவணிகரேஅனைத்துபணிகளையும்செய்கிறர். தொழிலில் ஏற்படும் இலாபம்முழுவதும்அவரையேசேரும்.அதுபோல்நட்டம் முழுவதும்அவரேஏற்கவேண்டும்தொடங்குவதுஎளிது. சட்டச்சடங்குகள்ஏதும்இல்லை.

**2.இந்து கூட்டக்குடும்ப வணிகம் :**

இந்துகுடும்பவணிகத்தில்ஒரேகுடும்பத்தில்பிறந்தவாகள் உறுப்பினாகள்அவர்கள்சொத்துகள்அனைத்தும்கூட்டுச் சொத்தாகும்.குடும்பத்தலைமைஉறுப்பினருக்குகாத்தா என்றுபெயர். தலைமைஉறுப்பினரால்குடும்பவணிகம் நடத்தப்படுகிறது.விவசாயம்கைத்தொழில்கள் சிறுதொழிற்சாலை போன்றதொழில்களில்ஈடுபடுவர்கள். இந்துவாரிசுசட்டம்1956ஒருகூட்டுஉரிமைமரணம்அடைந்தபின் அவரின்வாரிசுதாராகள்சொத்தின்உரிமையுள்ளவராகிறார்கள்.1985ஆம்ஆண்டிலிருந்துஇச்சட்டம்மகனைப்போலவேமகளுக்கும்சமஉரிமைவழங்கிவருகிறது.

3.**கூட்டாண்மை**:இருவரோஅல்லதுஅதற்குமேற்பட்டநபாகளோஒப்பந்தத்தின்மூலம்தேவையானமுதலீட்டு திறமையும்அளித்துஒப்புக்கொண்டவிகிதத்தின்படிஇலாபநட்டம்பகிர்ந்துதொழிலைநடத்தும்அமைப்பு குறைந்தபட்சம்இருவர்அதிகபட்சம்வங்கிதொழிலுக்கு 10 நபாகள்பிறதொழில்களுக்கு 20 நபாகள் ஒவ்வொருகூட்டாளியும்வியாபாரமேலாண்மையில்பங்குகொள்ளும்உரிமையும்கருத்துக்கூறும்உரமையும்உண்டு.

4.**கூட்டுப்பங்குநிறுமம்**: நிறுமம்என்பதுபலநபாகளின் சங்கமாகும்.இதுசட்டத்தால்கூட்டுருவாக்கப்பட்டு தனிநபர்தன்மையும்பொதுமுத்திரையும்நிலைப்பேற்று தொடாச்சியும்பெற்றஅமைப்பாகும்.நிறுமம்தன்பெயாலேயேஒப்பந்தங்களில்ஈடுபடலாம்.பங்குநரின்பொறுப்புவரையறுக்கப்பட்டது.பங்குகளைஎளிதாகமாற்றித்தரஇயலும்நிறுமத்தின்மேலாண்மைஇயக்குநரவையிடம்ஒப்படைக்கப்பட்டுள்ளது.

5.**கூட்டுறவுசங்கங்கள்**: பொதுவானபொருளாதாரநலன் கருதிதாமாகஒன்றுசோந்துஅமைத்துக்கொள்ளும்சங்கமாகும்.இதன்நோக்கம்சேவைசெய்தல்முதன்மைப்பணி. இலாபம்ஈட்டுவதுஇரண்டாவதுபணி.ஒருநபர் எத்தனைபங்குகள்வைத்திருந்தாலும்அவருக்குஒருவருக்குமட்டுமேஉண்டு.ஒருநபர்ஒருவாக்குஎன்பதுஇதன்மிகமுக்கியகோட்பாடாகும்.இதில்பொதுவாகரொக்கஅடிப்படையில்மட்டுமேவியாபராம்நடைபெறும்.கூட்டுறவுஅமைப்பு பதிவுசெய்தவுடன்கூட்டுருவாக்கம்பெறுகிறது.இவ்வமைப் புகுடியாட்சிஅமைப்பின்கோட்பாட்டின்படி நிர்வகிக்கப்படுகிறது.
அரசுஇதற்குமுத்திரைத்தாள்வரிபதிவுகட்டணங்கள்வருமானவரிஇவற்றிலிருந்துவிலக்களிக்கப்பட்டிலுக்கிறது.

6.**பன்நாட்டுநிறுமங்கள்**: பன்னாட்டுநிறுமம்என்பது இரண்டுஅல்லதுஅதற்குமேற்பட்டநாடுகளில்வியாபாரம் நடத்திமேலாண்மைசெய்துவருவதாகும்.

சிறப்பியல்புகள்

1. ஒரேநேரத்தில்பலநாடுகளில்நடத்தப்படும்
2. மிகப்பெரியஅளிவில்செயல்படும்

3.பிறநாடுகளில்உள்ளகச்சாப்பொருட்கள்பணியாளாகள்சந்தையைபயன்படுத்திக்கொண்டுபோக்குவரத்துச்செலவுகளைகுறைக்கமுற்படும்.

(எ.கா) யூனிலீவர் லிமிடெட் - பிரிட்டிஷ்நிறுமம்
யூனியன்கார்பைடு - அமொாக்காநிறுமம்
பிலிப்ஸ் - டச்சுநிறுமம்
கோகோகோகோகழகம் - அமொாக்காநிறுமம்

**அரசுநிறுவனங்கள்**பொதுமக்களுக்குசேவைசெய்ய அரசாங்கத்தினால்நடத்தப்படும்நிறுவனங்கள்

1.**துறைமுறைஅமைப்பு**:
இதுஅரசின்ஒருபகுதியாகசெயல்படுகிறது. அந்தந்தஅமைச்சகத்தின்நிர்வாகஅதிகரகளால்நிர்வாகம் செய்யப்படுகிறது.இதுபொதுத்துறைஅமைப்பில்மிகவும் பழைமையானதாகும்.

2.**பொதுகூட்டுரு**:பாராளுமன்றத்தில்தனிச்சட்டத்தின்மூலம்உருவாக்கப்படும்அமைப்புஇதுசட்டமுறைக்கழகம்என்றும்பெயர்இதுஅரசின்நிதியுதவியுடன்மேலாண்மையில்சுயாட்சித்தன்மைகொண்டதாகும்.
இதன்மேலாண்மைஅரசால்நியமிக்கப்படும்இயக்குநாகுழுவால்நிர்வாகம்செய்யப்படுகிறது.
இதன்நோக்கம்பொதுமக்களுக்குச்சேவைசெய்தல்.
(எ.கா)இந்தியரிசர்வுவங்கிஇந்தியஆயுள்காப்பீட்டுகழகம்யூனிட்டிரஸ்டுஆப்இந்தியாஉற்பத்தி தொழில்நிதிகழகம்.

3.**அரசுநிறுமங்கள்**:இந்தியநிறுமச்சட்டம்1956-ன்படி உருவாக்கப்படுவது.இதன்செலுத்தியபங்குமுதலில் 51% மத்தியஅல்லதுமாநிலஅரசுகளோஅல்லதுமத்தியமாநில அரசுகளோசோந்துபெற்றிருத்தல்
தனியார் நிறுமத்திலும்அரசுமுதலீடுசெய்கின்றன. இதன்பணியாளாகள்அரசுஊழியாகள்அல்லா.தனியார் துறைஏற்கஅஞ்சும்தொழில்களில்அரசுநிறுமம்முதலீடு செய்கிறது.நலிவடைந்ததனியார்துறைநிறுவனங்களை ஏற்றுநடத்தப்படுகிறது.
(எ.கா)அரசுபோக்குவரத்துக்கழகம்இந்துஸ்தான்ஸ்டில்லிமிடெட்மாருதிஉத்யோக்பெல

4. **வாரிய அமைப்பு** வாரிய அமைப்பின் மேலாண்மை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவிடம் உள்ளது. இது தனிச் சட்டங்களால் ஒழுங்குபடுத்தப்படுகிறது. (ஏ.கா.) தமிழ்நாடு மின்சாரவாரியம்.

**64.ஆ.அரசு தொழில்களின் நோக்கங்கள் :**

**1.பல்வகைஉற்பத்தி செய்ய உதவுவது**: இலாபம் ஈட்டுவதிலேயே குறியாக இருக்கும் தனியார் தொழில் முனைவோர்.லாப வாய்ப்பு மிகுந்த தொழில்களில் மட்டும் முதலீடு செய்ய விரும்புவர்.லாப வாய்ப்புகள் அதிகம் இல்லாத அதே சமயம் நாட்டுக்கு தேவையான தொழிகளின் முதலீடு செய்ய

விரும்பமாட்டார்கள்.தனியார் துறை மேற்கொள் அஞ்சும் தொழிகள் முதலீடு செய்ய விரும்பமாட்டார்கள்.

**2.அடிப்படை தொழிகளின் வளர்ச்சி** : பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத தொழில்களை அடிப்படை தொழிகள் எனலாம்.எடுத்துக்காட்டாக இரும்பு எ.்.கு ஆலைகள் வேதிய தொழில்கள் போன்றவை அடிப்படை தொழிகள்ஆகும். இத்தகைய தொழிகள் அரசு தொழில்கள் அரசு தொழில்களாகவே இருப்பதே சால சிறந்தது.

**3.பேரளவு முதலீட்டு நிறுவனங்கள்:**
சிலதொழில் நிறுவனங்களில் பேரளவு முதலீடு செய்ய விரும்பும் மேலும் அந் நிறுவனங்கள் தொழில் உற்பத்தி தொடக்க காலம் நீண்டதாக இருக்கும்' தனியார் தொழில் முனைவோர் கலால் பேரளவு முதலீட்டினை அளிக்க முடியாது.எடுத்துக்காட்டாக இரயில் கப்பல் கட்டுவது மின்சக்கி ஆகிய தொழிகளுக்க தேவையான பேரளவு முதலீட்டினை தனியார் முதலீட்டினால் அளிக்க முடியாது.

**4.இன்றியமையாத வசதிகளை நல்குவது**: குடிநீர் மின் உற்பத்தி மின்சக்தி எரிவாயு போக்குவரத்து தகவல் தொடர்பு போனடறவை நாடு முழுவதும் அன்றாட தேவைப்படும் இன்றியமையாத வசதிகள் ஆகும் இத் தேவைகள் மிக குறைந்த விலையில் பூர்த்தி செய்ய வேண்டும். எனவே இவ்வசதிகளை செய்து தரும் அமைப்பகள் அரசு தொழிகள் ஆகவே இயங்க வேண்டும்.

**5.முற்றுரிமை நிறுவனங்களை ஏற்படுத்தவது:** ஒரு நாட்டை அயல் நாடுகளின் தக்குதலில் இருந்து காப்பது மிகவும் இன்றியமையாதது ஆகும்.நாட்டின் பாதுகாப்பு சார்ந்த தொழிகள் தனியார் வசம் இருந்தால் ஒரு நெருக்கடி ஏற்படும் பொழுது அவர்கள் அரசுக்கு முழு ஒத்துழைப்பையும் நல்காமல் போகும் நிலை உருவாக வாய்ப்பு உண்டு.அல்லாமலும் அவர்களட நாட்டின்பாதுகாப்பு குறித்த ரகசியங்களை எதிரி நாடுகளுக்கு சொல்லக்கூடிய அபாயமும் இருக்கிறது.

**6.அனைத்து பகுதிகளிலும் சமமாக பொருளாதார வளர்ச்சி பெறுதல்:**தொழில் உற்பத்தி வளர்ச்சியின் நோக்கம் நாட்டிற்கு தேவையான அனைத்து உற்பத்தி தொழில்களை ஏற்படுத்துவதே ஆகும் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சமச்சிரான முன்னேற்றம் ஏற்பட வேண்டும்.தனியார் துறையினர் லாபம் ஈட்ட வாய்ப்ப உள்ள அவர் நாட்டின் பின்தங்கிய பகுதிகளில் தொழில் நிறுவனங்களை அமைக்கவிரும்பியதில்லை.

**7.இயற்கை வளங்கள் தோன்றி எடுத்தல்:** நாட்டின் இயற்கையாக கிடைக்கும் பொருட்கள் வளங்களை தோன்றி எடுக்கும் தொழிகளில் முதலீடு செய்வதே நட்டத்தை ஏற்று கொள்ள தனியாா துறை விரும்புவதில்லை. இந்தியாவில் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கமிசன் புதுத்தோற்று வாய்களை கண்டுபிடிப்பதற்காக பேரளவு தொகைகளை செலவிடுகிறது.

**8.பொருளாதார வலிமை** செரிவடைவதை தடுத்தல்:
உற்பத்தியானது தனியாரிடம் முழுவதுமாக இருந்தால் தங்களுடைய லாபத்தை அதிகரிப்பதற்காக அவர்கள் பொது மக்களையும் நுகர்வோரையும் சுரண்டுவர் தனியார் துறை அவ்வாறு லாப நோக்கோடு செயல்படும் போது அதன் விலைவாக பொருளாதார வலிமை அவற்றிடம் மேலும் செறிவடைவதையும் நாம் அறிவோம்.

**9.நிறைவேலைவாய்பை உறுதிபடுத்துதல் :**
நிறைவேலைவாய்பு பொது உடமை உற்பத்தியினாலே நாடுகள் கூட வேலைவாய்பை பெறுவதில்லை .நாட்டில் உள்ள வழங்கள் நன்கு பயன்படுத்தப் பட்டால்தான் பொருளதாரவளர்ச்சி விரைவாக ஏற்படும்.இதற்கு அரசு பொருளாதார துறை கவனம் செலுத்தி திட்டங்கள் தீட்ட வேண்டும்.

**10.அரசின் வருவாயை பெருக்குதல்:** சில அரசு நிறுவனங்கள் வணிக கொள்கைகளின் அடிப்படையில் செயல்படும்.அந்நிறுவனங்களில் வருவாய் அரசு கருவுலத்தில் சேர்க்கப்படும்.இவ்வாறு அரசின் நிதிநிலைமை மேம்படுத்தப்பட்டு பொருளாதார முக்கிய துவம் வாய்ந்த திட்டங்களை நிறைவேற்ற பயன்படுத்த படுகிறது இது மக்கள் வாழ்க்கை தரம் உயர்த்த உதவும்.கல்வி மருத்தவம் வீடு போன்றவை பொது நல பணிகளுக்கம் இவ்வருவாய்செலவிடப்படுகிறது.

**65.தனிவணிகத்தின் நன்மை குறைபாடுகள் :**

**1.நன்மைகள் : 1.எளிதான அமைப்பு** : தனியாள் வணிகத்தை சட்டச் சிக்கல்கள் ஏதுவுமின்றி துடங்கலாம். ஒப்பந்தம் பதிவு முதலியன தனியாள் வணிகத்திற்கு தேவையில்லை.

**2.நேரடி ஊக்குவிப்பு** : 1.வியாபாரத்தில் இலாபம் முழுவதும் தனியார் வணிகத்தைச் சாரும். எவருடன் ஒப்பிட்டுக் கொள்ளத் தேவையில்லை.

**3.நெகிழ்ச்சி தன்மை** : தனியாள் வணிகம் என்பது முழு அளவில் நெகிழ்ச்சி தன்மையுடன் செயல்படக்கூடிய வணிக அமைப்பாகும். தனியாள் வணிகத்தை மாற்ற எவ்வித செலவுகள் இல்லாமலும் எளிதில் மாற்றிக்கொள்ளலாம்.

**4.வியாபார ரகசியங்களை காத்தல்** : வியாபார வெற்றிக்கு தொழில் ரகசியங்களை காத்தல் அவசியம். தனியாள் வணிகத்தில் ஒருவர் மட்டும் என்பதால் வியாபார ரகசியங்களை காக்க இயலும். **5.விரைவான முடிவு** : தனியாள் வணிகத்தில் ஒருவர் வேறுஉரிமையாளர் இல்லை எனவே அவர் காலதாமதமின்றி விரைவாக முடிவெடுக்கலாம்

**6.அதிக வெகுமதி** : தனியாள் வணிகத்தில் தன் வியாபாரத்தை சரிவர கவனிக்கத்தவரினால் நட்டம் ஏற்படும். கடின உழைப்பு கவனமான அனுகுமுறை பொருளாதார சிக்கனம் ஆகிய நன்மைகளை தனியாள் வணிகருக்கு சாரும். **7.அதிக நிதி தரமதிப்பீடு** தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. சொந்த சொத்துகளில் இருந்து கடனீந்தோருக்கு செலுத்த வேண்டும்.அதனால் பலர் கடன் தரமுன்வருவார்.

**8.சுய வேலைவாய்ப்பு** : குறைந்த மூலதன முடைய பலருக்கும் தொழில் தொடங்க வாய்ப்பளிக்கிறது. அடிமைத்தொழில் செய்ய விரும்பாத நபர்களுக்கு தனியாள் வணிகம் வாய்ப்பளிக்கிறது.

**9.ஆளுமை வளர்ச்சி** : தன்னம்பிக்கை தொழில் தொடங்கும் முயர்சி பொறுப்புணர்ச்சி சுதந்திரமாக முடிவெடுத்தல் போன்றவை வளர்கிறது.

**10.எளிமையாக கலைப்பு** : .கலைப்பது மிகவும் எளிது. விரும்பிய போது எவ்வித சட்ட சிக்கல்களும் இல்லாமல் கலைக்கலாம்.

**குறைபாடுகள் :1.அளவான முதல்** : மூலதன ஆதாரங்கள் வரையறுக்கப்பட்டது. வியாபார பெருக்கம் முடிவதில்லை கடன் பெற்று முதலீடு செய்தாலும் அதற்கான வட்டி ஆதாயத்தை குறைக்கும் வரையறா பொறுப்பு இடர்வேறு உடையது.**2.வரையறுக்கப்பட்ட லோண்மைத்திறன் :** தனியாள் வணிகரின் உரிமையாளருக்கு மேலாண்மைத் திறமைக்கு எல்லை உண்டு.
வல்லுநரை பணியில் அமர்த்த இவரது நிதிநிலையும் இடம்தராது **3.வரையறா பொறுப்பு :**

தனிவணிகரிவரையறாப் பொறுப்பு அவருடைய ஆர்வத்தை பாதிப்பதாகவும் வியாபாரத்தில் நவீன எண்ணங்களை புகுத்தத் தடையாக உள்ளது.

**4.குறுகிய வாழ்வு :** தனியாள் வணிகரின் வாழ்வை பாதிக்கும் எந்த ஒருகாரணமும் தொழிலையும் பாதிக்கும்.நிலையான திறமையின்மை,வாரிசு இன்மை,இறப்பு போன்ற காரணங்கலால் தொழில் முடிவுக்கு வந்துவிடும். **5.அவசரமுடிவு** :தீர விவாதித்து எடுக்கும் முடிவே சிறப்பானதாக இருக்கும்.இம்முறையில் ஒருவரே முடிவெடுப்பதால் தாவறான முடிவாக அமையவாய்ப்பில்லை.

**6.சிறப்பு தேர்ச்சியின்மை :**கொள்முதல் விற்பனை கணக்குப்பதிவியல் விளம்பரம் போன்ற தனித்திறம் வேண்டுபவை. இவ்வமைப்பில் ஒருவரே அனைத்தையும் கவனிக்க இயலாது

**7.குறைந்த அளவு வியாபாரம் :** முதல் மற்றும் திறமை குறைவாக இருப்பதினால் தனி வணிகாகளட தங்களது வணிக அமைப்பை சிறிதகவே அமைத்துக்கொள்கிறார்கள். இதனால் பெயரளவு உற்பத்தியின் பயன்களை பெற இயலாது. **8.கலந்து ஆலோசனையின்மை :**
சில முக்கிய முடிவுகளை எடுக்கும் போது குடும்ப உறுப்பினர்களைத்தவிர பிறரை கலந்து ஆலோசிக்காமல் முடிவு எடுக்கலாம் முடிவு தவறாக இருந்தால் பெரும் நட்டம் ஏற்படும்.

**9.நிலையற்றதன்மை :** வாழ்வு நிலையற்றது ஆகும். நவீன வளர்ச்சிக்கேற்றவாறு தன் அணுகுமுறையை மாற்றிக்கொள்ளாவிட்டால்தொழில் செய்வது சிரமம்.

**65.ஆ)செபின் நோக்கம் இயல்பு பணிகள் அதிகாரம் விவரி :**

**நோக்கம் : 1.முதலீட்டாளர்களின் நலநனை பாதுகாத்தல் 2.பத்திரச்சந்தை நடவடிக்கைகளை ஊக்கப்படுத்துதல்**.அபிவிருத்தி மற்றும் ஒழுங்குபடுத்துதல் அதனை சார்ந்த நடவடிக்கைகளியின் ஈடுபடுதல்.1992 ல் வாரியமாக செபி ஏற்படுத்தப்பட்ட போது அடைதரகர்களின் செயல்கள் நடவடிக்கைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துதல் உள்வணிகத்தை தடைசெய்தல் பங்குகளின் ஏலத்தை நடைமுறைக்கோட்பாடுகள் உருவாக்கி நாணயமாக நடக்கச் செய்தல் ஆகிய பணி இதற்கு இருந்தது.

**இயல்புகள்:**

1.செபிச்சட்டத்தின் படி ஏற்படுத்தப்பட்ட நீடித்த வாழ்வு மற்றும் பொது முத்திரை கொண்ட ஒரு கூட்டுருவாக்கம் ஆகும்.

2.செபின் தலைமை அலுவலகம் மும்பையில் உள்ள கிளை அலுவலகங்கள் இந்தியாவில் மற்ற நகரங்களிலும் விளங்கும்.

3.(அ)சபைத்தலைவர்கள்

(ஆ)நிதி மற்றும் சட்டஅமைச்சக அலுவலர்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 2 உறுப்பினர்கள்

(இ)ரிசர்வ் வங்கி அலுவலர்களழிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு உறுப்பினர்

(ஈ)மேலும் 2 உறுப்பினர்கள் சபைத்தலைவர்கள் மற்றும் வாரியத்தின் 5 உறுப்பினர்கள் மத்திய அரசால் நியமிக்கப்படுவர்.

4.செபின் பொது கணிப்ப வழிகாட்டுதல்

**அதிகாரங்கள் :** மேலாண்மை ஆகியவை உறுப்பினர்களிடம் இருக்கும். இவ்உறுப்பினர்கள் அவை வாரியத்தின் எல்லா அதிகாரங்களையும் பெற்று பணிகளை நிரை வேற்றுவோம்

1.வாரியத்தின் சபைத்தலைவரையும் மற்ற உறுப்பினர்களையும் அப்பொறுப்பில் இருந்து நீக்க மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு.

2.மத்திய அரசு நிதிஉதவி செய்வதுடன் வாரியத்திற்கு அவ்வபொழுது தேவைப்படும் மானியங்களையும் வழங்குகிறது.

3.செபின் கொள்கைகளையும் திட்டங்களையும் வகுக்கும் பொழுது அவற்றிகான அனைகலை வழங்க மத்திய அரசுக்கு உரிமை உண்டு.வாரிம் தவறுதல் செய்யும் பொழுது அவற்றை விலக்கி சரிசெய்து நடவடிக்கை எடுக்க மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு.

**பணிகள் :**

1.பங்குமாற்றகங்களின் வியாபாரத்தை ஒழுங்கு படுத்துதல்.

2.இடைத்தரகர்களான பங்கு தரகர்கள் துணைத்தரகர்கள் வெளியிட்டு வங்கியர் ஒப்புறுதியாளர்கள் மற்றம் பத்திர சந்தையுடன் தொடர்புடைய மற்ற இடைத்தரகர்களின் செயல்பாடுகளை பதிவு செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்ததல்

3.பரஸ்பர நிதியங்கள் உள்ளிட்ட முதலீட்டு நிறுவனங்களை பதிவு செய்து ஒழுங்கு படுத்ததல்.

4.சுயகட்டுப்பாடு நிறுவனங்களை தோற்றுவித்தலும் ஒழுங்குபடுத்ததலும்

5.பத்திர சந்தையில் மோசடியான மற்றும் நேர்மையற்ற வணிக நடவடிக்கைகளை தடை செய்தல்

6.முதலீட்டாளர்களிடையே விழிப்புணர்ச்சியை வளர்த்தர் மற்றம் இடைத்தரகர்களுக்கான பயிரச்சியளித்தல்

7.பத்திரங்களுக்கான உள்வணிகத்தை தடைசெய்தல்

8.பங்குகளை கணிசமான அளவில் வாங்கி நிறுமங்களை எடுத்தக்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்ததல்

9.பங்குமாற்றகங்களிலிருந்து ஆகியவற்றின் அமைப்பு போன்ற விவரங்கள் பெறுவது பங்கு மற்றகங்களின் பரிசோதனை செய்தல் விசாரணை மற்றும் தணிக்கை செய்தல்

10.மத்திய அரசால் ஒப்படைவு செய்யப்பட்ட பணியிணை செய்தல்

**66)அ)கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படும் சூழ்நிலைகள் :**

**1.கூட்டாளிகளின் உடன்பாட்டால் (பிரிவு 40):** ஒரு கூட்டாண்மை நிறுவனம் உடன்பாட்டால் உருவாக்கபடுகிறது கலைக்கப்படுகிறது.அனைத்து கூட்டாளியின் சம்மதத்தின் பெயரில் அல்லது கூட்டாளிகளுக்கிடையே ஏற்படும் உடன்பாட்டால் கூட்டாண்மை நிறுவனம்ட கலைக்கபடலாம்.

**2.கட்டாய கலைப்பு (பிரிவு 41)** அனைத்து கூட்டாளிகளின் நொடிப்பு நிலையோ அல்லது ஒருவர் தவிர மற்ற எல்லா கூட்டாளிகள் நொடிப்பு நிலையோ கூட்டாண்மை நிறுவனம் கட்டாயமாக கலைக்கபடும்.மேலும் செய்து வரும் தொழில் சட்டத்திற்கு புறம்பானதாக இருந்தால் நிறுவனம் கட்டாயமாக கலைக்கபடும்.

**3.சில நிகழ்சிகள் நிகழ்வுறும் போது கலைப்பு (பிரிவு 42):** கூட்டாளியின் இறப்பு கூட்டாளியின் நொடிப்பு குறைந்த காலத்திற்கான கூட்டாண்மை – அந்தக் காலம் முடிந்தவுடனும் குறிப்பிட்ட தொழில் - அந்த தொழில் முடிந்தவுடன்.

**4.அறிவிக்கையால் விருப்பமுறிக் கூட்டாண்மை பிரிவு – 43 :**விருப்பமுறிக் கூட்டாண்மையில் ஒரு கூட்டாளி நிறுவனத்தை கலைக்கும் தனது விருப்பத்தை அறிவிக்கை மூலம் கொடுத்தால்' நிறுவனம் கலைவுறும்.

**5.நீதி மன்றத்தால் பிரிவு - 44:**கூட்டாளி எவரேனும் ஒருவர் கீழ்காணும் காரணங்களுக்காக வழக்கு தொடர்வதன் மூலம் நிறுவனத்தை கலைக்க நிதிமன்றம் ஆணையை பிறப்பிக்கலாம்.

**(1)கூட்டாளி ஒருவரின் பித்த நிலை** :கூட்டாளி ஒருவரின் பித்த நிலையை அடைந்தால் நீதி மன்றம் கலைப்பதற்கான ஆணையை பிறப்பிக்கலாம்.

**(2)நிலையான திறமை இன்மை** :கூட்டாளி ஒருவர் நிரந்தரமாக தொழில் செய்யும் திறமையை இழந்திருந்தால்

**(3)கூட்டாளியின் தீய நடத்தை** :கூட்டாளி ஒருவர் ஒழுக்கக் கேடான குற்றத்தை செய்திருப்பின்

**(4)உரிமை மாற்றம்** :கூட்டாளி ஒருவர் தனது உரிமை நலனை பிறருக்கு மாற்றி கொடுத்தால்

**(5)தொடர்ந்து உடன்பாட்டை மீறுகை** :கூட்டாண்மை உடன்பாட்டை ஒரு கூட்டாளி தொடர்ந்து மீறிக்கொண்டிருந்தால்

**(6)தொடர் நட்டம்** :கூட்டாண்மை நிறுவனத்தில் தொடர்ந்து நட்டம் ஏற்பட்டால் கலைக்க நேரிடும்.

**66.ஆ.நிறுமச்செயலரின் பணிகளும் கடமைகளும் :**

1.நிறுமத்தின் செயலகத்துறையின் தலைவர் என்ற முறையில் தனக்குகீழ்லுள்ள அனைத்து நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் நிறுமத்தின் முன்மை அதிகாரி என்ற முறை உண்மைச்சான்றென உறுதியளிக்க வேண்டிய ஆவணங்களில் கையெழுத்திடுதல் அவருடையபணி.

2.இயக்குநரவை தலைவரிடம் கலந்தாலோசித்து இயக்குநரவை கூட்டநாள் இடம் நேரம் முதலியவற்றை முடிவ செய்தலும் அதன் நிகழ்ச்சி நிரலைத்தயாரித்து அதனை கூட்டஅறிவிக்கையுடன் இணைத்தனுப்புதலுமாரும்.

3.இயக்குநரவை கூட்டத்தின் செயல்பாடுகள் நிறுமங்கள் சட்ட விதிமுறைகளுக்கு முரண்படாமலும் அமைப்பு முறையேடு செயல் முறை விதிகள் ஆகியவற்றின் வரம்பு மிகாமலிருக்க பார்த்துகொள்ள வேண்டியது அவர் பணிகள் ஆகும்.

4.பங்குநர்களின் நலன் சிறக்கும் வகையில் செயலர் பணிசெய்கிறார்.அவர்களுடன் கூர்மதிப்புடன் நடந்தகொள்ள வேண்டும்.

5.பங்குநர்கள் எழுப்பும் வினாக்களுக்கும் ஐயங்கட்கும் உாயி முறையில் பண்புகாத்து காலங்கடத்தாமல் பதிலளிக்க வேண்டும்.

சட்ட முறைக்கடைமைகள் :

1.எச் சட்டத்தின் கீழாவது உண்மையென சான்றளிக்க வேண்டியிருப்பின் அத்தகைய ஆவணத்தில் கையொப்பமிடல்

2.தகவலறிக்கைக்கு மாற்றறிக்கை தக்கல் செய்ய

3.நிறுமத்தின் பதிவலுவலகம் உள்ள இடம்குறித்த அறிக்கையைத்தாக்கல் செய்ய

4.தொழில் தொடக்கச் சான்றிதல் பெற சட்டமுறை உறுதிவிலம்பல் செய்தலும் அவற்றை பதிவாளரிடம் தக்கல் செய்தலும்.

5.நிறுமத்தின் ஆண்டறிக்கையில் கையப்பமிடல்

பொதுக் கடமைகள் :

1.தன்னுடைய கமைகளை மிகுந்த கவனத்துடனும் நேர்மையுடனும் தன் அதிகார எல்லையை மீறாது செயல்படலும்.

2.இரகசியமான செய்திகளை வெளியிடாது காத்தல்.

67.அ.பொது வரையறு நிமத்திற்கும் தனிவரையறு நிறுமத்திற்கும் உள்ள வேறுபாடு :

| வ எண. | காரணிகள் | தனிவரையறு நிறுமம் | பொது வரையறு நிறுமம் |
|---|---|---|---|
| 1. | உறுப்பினர் எண்ணிக்கை | குறைந்த அளவு -2 அதிக பட்சம் -50 | குறைந்த அளவு -7 உச்ச அளவிற்கு வரம்பில்லை |
| 2. | பெயர் | வேலையாள் உறுப்பினரைத்தவிரதனிவரையறுநிறுமத்தின் பெயர் இறுதியில் தனிவரையறுக்கப்பட்டது என்றசொல்லுடன் முடிவடைய வேண்டும். | பொதுவரையறைநிறுமத்தின் பெயர் வரையறுக்கப்பட்டது.என்றசொல்லுடன் முடிவடைய வேண்டும். |
| 3. | செயல் முறைவிதிகள் | தான் சொந்தமாக தாயாரிக்கப்பட்டசெயல்நடைமுறைவிதிகளை நிறுமப்பதிவாளரிடம் சமர்பிக்கவேண்டும் | செயல் நடைமுறைவிதிகளை தயாரிக்காத நிறுமங்கள் நிறும சட்டதிதில் உள்ளமாதிரி அட்டவணை –அபின்பற்ற வேண்டும். |
| 4. | குறுமப்பங்கொப்பம். | இதில் அவசியமில்லை | இதில் சட்டப்படிகட்டாயமாகும் |
| 5. | பங்குஒதுக்கீடு செய்தல் | பங்கு ஒதுக்கீட்டிற்குமுன் நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகள் தனிவரையறு நிறுமத்திற்கு பொறுந்தாது. | குறைந்த அளவு பங்கெடுப்பு ஏற்கனவே உள்ள பங்குதாரர்களுக்கு பங்குகளை அளித்தல் |
| 6. | இயக்குநர்கள் | குறைந்தது 2 நபர்கள் இருக்க வேண்டும் | குறைந்தது 3 நபர்கள் இருக்க வேண்டும் |
| 7. | சட்டமு | கூட்டம் கூட்ட | நிறுமம் |

| | | | |
|---|---|---|---|
| | றைக்கூட்டம் | வேண்டிய அவசியமில்லை | தொடங்கி 6 மாதத்திற்குள் இக் கூட்டம் நடைபெறவேண்டும் |
| 8. | தகுதிப்பங்பங்குகள் | பெறவேண்டிய அவசியமில்லை | தகுதிப்பங்குகள் பெற்றிருக்க வேண்டும். |
| 9. | குறைவெண் | குறைந்தளவு 2 நபர்கள் | குறைந்தளவு 5 நபர்கள் |

**67)அ).கூட்டுறவு சங்கத்தின் நன்மைகள் :**

**நன்மைகள்:**

**1.அமைப்பது எளிது:** கூட்டுறவு சங்கத்தை அமைப்பது எளிது.செலவும் அதிகமில்லை. பதிவு நடைமுறையும் எளிமையானது.

**2.வரையறாஉறுப்பினர்கள்:** உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு வரையறை இல்லை.ஒவ்வொரு உறுப்பினரும் தன் விருப்பப்படி சேரவோ விலகவோ உரிமை உண்டு.

**3.மக்களாட்சி மேலாண்மை:** கூட்டுறவு அமைப்பின் மேலாண்மை மக்களாட்சி தன்மை கொண்டுள்ளது.எவ்வளவு முதலீடு செய்திருப்பினும் உரிமையாளருக்கு வாக்குரிமை உண்டு.பெருமளவில் பங்குகளை வைத்திருப்பவர்களின் கைகளில் அச்சங்கங்கள் கட்டுண்டு கிடப்பதில்லை.

**4.வரையறு பொறுப்பு:**உறுப்பினர்களின் பொறுப்பு அவாகள் வைத்திருக்கும் பெயரளவு மதிப்பு வரை என வரையறுக்கப்பட்டுள்ளது.உறுப்பினர்களின் சொத்துகளை இழக்க தொழிலுக்காக இழக்க வேண்டியதில்லை.

**5.மலிவான சேவை**:இச் சங்கம் நல்ல சேவைகளை மலிவான செலவில் அளிக்கிறது.சேவை என்பது முதன்மை நோக்கம் இலாபம் என்பது அடுத்த பட்சம்.

**6.நிலையான தன்மை :**பதிவு செய்வதால் கூட்டறவு சங்கங்களுக்கு சட்டத் தோற்றம் கிடைத்து விடுகிறது.உறுப்பினர்களின் இறப்பு மனசமநிலையற்ற நிலை நொடிப்பு நிலை இதனால் பாதிக்கிறது.

**7.மேலாண்மைச் சிக்கனம் :**பொதுவாக உறுப்பினர்கள் சங்கத்தை மேலாண்மை செய்கின்றனர்.இயக்கநரவை குழுவில்லுள்ள அதன் உறுப்பினர்கள் கௌரவ சேவை செய்கின்றனர்.

**8.வரிச்சலுகைள் :**

கூட்டுறவு சங்கங்களின் வருவாய்க்கு வாருமான வரி விதிக்கப்படுவதில்லை.வருமான வரி முத்திரைக்கட்டணம் பதிவு கட்டணம் ஆகியவை விலங்குகிறது.

**9.சமுக பயன் :**கூட்டுறவு அமைப்பு என்பது போட்டியில்லாத நிறுவனமாகும் தனிமனித சுதந்திரம் சமுக நிதி மற்றும் பரஸ்பர கூட்டுறவை வளர்க்கிறது.

**10.சேமிப்பு வழக்கம் :**உறுப்பினர்களிடையே சேமிப்புப் பழக்கம் தனக்குத்தானே உதவி சமூக நிதி ஆகிய நல்ல நெறிகளை வளர்க்கிறது.